**Copy of Deposition**

**சார்பு நீதிமன்றம், கொடுமுடி, ஈரோடு மாவட்டம்.**

2025 ம் ஆண்டு **ஏப்ரல் மாதம் 04-ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1-ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.113 /2024**

**வா.சா:-1 தியாகராஜன்**

**குறுக்கு விசாரணை(1ம் பிரதிவாதி தரப்பில்):-**

தாவா சொத்துக்கள் அருள்மிகு சொக்கநாச்சி அம்மன் திருக்கோவிலுக்கு பாத்தியப்பட்ட இனாம் பூமி என்றால் செட்டில்மென்ட் தாசில்தார் மேற்படி கோவில் பெயருக்குதான் பட்டா கொடுத்துள்ளார், ஆனால் கடந்த 200 வருடங்களாக மேற்படி சொத்தானது எங்களது சுவாதீன அனுபவத்தில் இருந்து வருகிறது. மேற்படி சொத்து எங்களுக்கு கிரைய வகையில் பாத்தியப்பட்ட சொத்தா என்றால் ஆமாம். எந்த வருடம் கிரையம் ஏற்பட்டது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. கிரைய பத்திரம் உள்ளதா என்றால் இல்லை. எனது தாத்தா மாணிக்க சுந்தரம் என்பவர் வழக்கறிஞராக பணிபுரிந்தவர் என்றும், மேலும் இந்த தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து வந்தார் என்றால் சரிதான். செட்டில்மென்ட் தாசில்தார் வா.த.சா.ஆ.5 ஆவணப்படி பட்டா கொடுத்த காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்றால் சரியல்ல. எந்த காலகட்டத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் என்றால் 1956 முதல் 1960 வரை இருந்தார். செட்டில்மென்ட் தாசில்தார் முன்பாக எனது தாத்தா ஆஜராகி வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். செட்டில்மென்ட் தாசில்தார் முன்பாக எனது தாத்தா வா.த.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அந்த விசாரணையின்போது

**Copy of Deposition**

1916ம் வருடம் வா.த.சா.ஆ.1 ஆவணப்படி சொத்துக்கள் எங்கள் குடும்பத்திற்கு ஒதுக்கப்பட்ட விவரம் மேற்படிசெட்டில்மென்ட் தாசில்தார் முன்பாக எனது தாத்தா சாட்சியம் அளித்தபோது சொல்லப்படவில்லை என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் இருந்து சொக்கநாச்சி அம்மன் கோவில் எவ்வளவு தூரத்தில் உள்ளது என்றால் 4,5 கி.மீ தூரத்தில் உள்ளது. வட்டக்கல் வலசிற்கும் மேற்படி கோவிலுக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் சுமார் 2,3 கி.மீ தூரம் இருக்கலாம். சொக்கநாச்சி அம்மன்கோவில் எங்களது குலதெய்வம் ஆகும். வா.த.சா.ஆ.5 ஆவணப்படி கோவில் பெயருக்கு பட்டா கொடுத்த நாள் முதல் 60 ஆண்டுகளாக கோவில் பெயரில்தான் பட்டா இருந்து வருகிறது என்றால் சரிதான், ஆனால் அனுபவம் எங்களிடம்தான் உள்ளது. கோவில் பெயரில் உள்ள பட்டா நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1967ம் வருடம் கோவில் பெயருக்கு பட்டா கொடுத்ததை எதிர்த்து கடந்த 2012ம் வருடம் எனது தகப்பனார் CMA.2/2012 என்ற எண்ணில் ஈரோடு முதன்மை சார்பு நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். எனது தாத்தா எப்போது இறந்தார் என்றால் 2004ம் வருடம் இறந்தார். எனது தாத்தா இறக்கும்வரை கோவில் பெயருக்கு பட்டா வழங்கியதை பொறுத்து மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால், எனக்கு தெரிந்தவரை மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை. செட்டில்மென்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவானது 1967ம் வருடம் தெரிந்த பிறகு அதன் பேரில் ஏற்பட்ட CMA.2/2012 ஆனது காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டதாக கூறி தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி CMA.2/2012 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், உத்தரவு ஆணை மட்டுமே தாக்கல்செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி CMA.2/2012 மனுவில் பிறப்பிக்கட்ட உத்தரவை தாக்கல் செய்ய முடியுமா என்றால் வீட்டில் இருக்கும், இருந்தால் தாக்கல் செய்யலாம். CMA.2/2012 மனுவில் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு எதுவும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எங்களுக்குதான் பாத்தியம்

என்றும் அதை விளம்புகை செய்யக்கோரி அ.வ.எண்.145/2006 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் அந்த வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகத்தான் தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி அ.வ.எண்.145/2006 வழக்கு தாக்கல் செய்த சமயத்திலும் செட்டில்மென்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவு பற்றிய விவரம் தெரியும் என்றால் அந்த விவரம் என் அப்பாவிற்குதான் தெரியும். என் அப்பாவை சாட்சியாக விசாரிக்க உள்ளோமா என்றால் தேவைப்பட்டால் விசாரிப்போம். தாவா சொத்துக்கள் எக்காலத்திலும் எங்களது முன்னோர்களால் கிரையம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. உரிமை மாற்றம் மூலம் தாவா சொத்து எங்களுக்கு பாத்தியப்படவில்லை என்றால் சரியல்ல. 200 ஆண்டுகளாக தாவா சொத்துக்களை நாங்கள் அனுபவித்து வருவதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாய்மொழியாகவோ அல்லது எழுத்துமூலமாகவோ சுமார் 100 வருடங்களுக்கு முன்பாக கிரையம் பெற்றுள்ளார்கள், அந்த விபரம் எனக்கு சரியாக தெரியவில்லை. நான் கூறுவது போல் எந்த சொத்து பரிமாற்றமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. கோவில் பெயரில் பட்டா தெரிந்த பின்னர்தான் அ.வ.எண்.307/1971 என்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் கோவில் பெயரில் பட்டா கொடுத்தது பற்றி எங்களுக்கு நோட்டீஸ் எதுவும் வரவில்லை. 1967ம் வருடமே பட்டா கொடுத்த விபரம் எனது தாத்தாவிற்கு தெரியும் என்றும், அந்த விபரத்தை மறைத்துதான் அ.வ.எண். 307/1971 வழக்கை தாக்கல் செய்து வா.த.சா.ஆ.7 ஆவணப்படி தீர்ப்பு பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. அ.வ.எண்.20/1997 தாக்கல் செய்த சமயத்திலும் தாவா சொத்து கோவில் பெயரில் இருந்த விவரம் சொல்லப்படவில்லை என்றால் 2012ம் வருடம் CMA.2/2012 தாக்கல் செய்த சமயத்தில்தான் கோவில் பெயரில் பட்டா இருந்த விவரம் தெரிய வந்தது. அ.வ.எண்.20/1997 வழக்கில் எனது தாத்தா மாணிக்க சுந்தரம் 1ம் பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வழக்கை யார் தாக்கல் செய்தார்கள் என்றால் எனது தாத்தா மாணிக்க சுந்தரத்தின் இறந்துபோன 3வது மகன் சுப்ரமணி என்பவரது வாரிசுகள் தாக்கல்

செய்தார்கள். மேற்படி வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டது என்றால் பாகப்பிரிவினைக்காக தாக்கல் செய்யப்பட்டது. மேற்படி வழக்கின் வழக்குரை மற்றும் தீர்ப்பு, தீர்ப்பாணை ஆகியவை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். செட்டில்மென்ட் தாசில்தார் பிறப்பித்த உத்தரவிற்கு பிறகு எங்கள் குடும்பத்தினருக்கு இடையில் தாக்கல் செய்த வழக்கின் மூலம் பெற்றுக்கொண்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது கோவிலின் உரிமையை பாதிக்காது என்றால் சரியல்ல. 01.11.1950 மற்றும் 15.02.1960 ஆகிய தேதியிட்ட பாகபிரிவினை ஆவணத்தில் கோவில் ஒரு தரப்பினராக இல்லாததால் மேற்படி ஆவணங்கள் 1ம் பிரதிவாதி கோவிலை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அ.வ.எண்.307/1971 மற்றும் அ.வ.எண்.20/1997 ஆகிய இரண்டு வழக்குகளிலும் 1ம் பிரதிவாதி கோவிலானது தரப்பினர் இல்லாததால் மேற்படி வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையானது 1ம் பிரதிவாதியின் கோவிலை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. கோவில் பெயரில் பட்டா வழங்கப்பட்டு அதன் உத்தரவை பெற்றுக்கொண்டதால்தான் பின்னிட்டு தாக்கல் செய்த வழக்கின் பட்டாவை மறைத்துள்ளோம் என்றால் சரியல்ல. எங்களது உரிமை மூலமானது 1967ம் வருடமே மறுக்கப்பட்டுள்ள விவரம் தெரிந்து 2021ம் வருடத்தில் விளம்புகை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கானது காலவரம்பால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனத்தை 1ம் பிரதிவாதி கோவில் வசம் ஒப்படைக்கக்கோரிய நடவடிக்கைகள் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். மேற்படி நடவடிக்கைகளை தடை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், தாவா சொத்தில் எங்களுக்கு உரிமையும்இல்லை என்றால் சரியல்ல. 1916ம் வருடத்திய பாகபிரிவினை ஆவணத்தின் 28ம் தாளில் தாவா சொத்தானது இனாம் பூமி என்றுதான் காட்டப்பட்டுள்ளது என்றால் இனம் மதிப்பு என்றுதான் காட்டப்பட்டுள்ளது. வா.த.சா.ஆ.8 ஆவணமானது பதிவு செய்யப்படாத பத்திரம் என்றால் சரிதான்.

**Copy of Deposition**

வா.த.சா.ஆ.8 ஆவணமானது வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல.

**2ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**

| |
|---|
| Taken down me in Open Court read over to the witness and acknowledge by |
| Interpreted<br>Him / Her To Be Correct<br><br>(Sd xxx M. Ramachandran)<br>Subordinate Judge,<br>Kodumudi |